## தெளிவான நடைமுறை கோட்பாடு

வங்கி சாரா நிதிநிறுவனங்களுக்கான இந்திய ரிசர்வ் வங்கியின் 26 மார்ச் 2012 தேதியிட்ட சுற்று அறிக்கை DNBS.CC.PD.No.266/03.10.01/2011-12-யின்படி, டெக்கான் பைனான்ஸ் லிமிடெட்டின் இயக்குனர் குழு 30.05.2012 அன்று மேற்கொண்ட தெளிவான நடைமுறை கோட்பாடு.

இந்த தெளிவான நடைமுறை கோட்பாடு இந்திய ரிசர்வ் வங்கியின், வங்கி சாரா நிதிநிறுவனங்களுக்காக வரையறுத்த வழிகாட்டுதலின்படி நடைமுறைப்படுத்தபடுகிறது.

## தெளிவான நடைமுறை கோட்பாடு

இந்த நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ள தெளிவான நடைமுறை கோட்பாட்டு செயல்பாடுகளின் முக்கிய அம்சங்கள்.

### கடன் விண்ணப்பங்களும் அதன் பரிசீலனையும்

எல்லா கடித போக்குவரத்துகளும் விண்ணப்பதாரரால் புரிந்து கொள்ளக் கூடிய அல்லது உள்ளூர் மொழியில் பராமரிக்கப்படும்.

கடன் விண்ணப்பங்களில் முக்கிய கடன்பெறுபவரின் நிதி தேவையான மற்றும் நியாயமான முடிவை எடுக்கும் வகையில் அதே சமயம் கடன்தாரரின் உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் இருக்கும். கடன் விண்ணப்ப படிவத்துடன் சேர்த்து இணைக்கப்பட வேண்டிய அத்தாட்சி ஆவணங்கள் பற்றிய விவரங்கள் குறிக்கப்பட்டிருக்கும்.

நிறுவனம் பூர்த்தி செய்யப்பட்ட ஒவ்வொரு கடன் விண்ணப்பங்களும் அதனை பெற்றுக் கொண்டதற்கான ரசீது வழங்கப்படும். மேலும் அந்த கடன் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு எவ்வளவு நாட்களில் முடிவு எடுக்கப்படும் என்ற விவரமும் அந்த ரசீதில் குறிக்கப்பட்டிருக்கும்.

### கடன் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளுதல் – கடன் பரிசீலனை மற்றும் நிபந்தனைகளும் விதிமுறைகளும்

கடன் விண்ணப்பதாருக்கு கடன் அங்கீகரிக்கப்பட்ட விவரம் எழுத்து மூலம் தெரிவிக்கப்பட வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகை வருடாந்திர வட்டி விகிதம் மற்றும் அதனை செயல்படுத்தும் முறை, இதர நிபந்தனைகள் இந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட வேண்டும். மேலும் இந்த விவரங்கள் ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளும் கடன் படிவம் உட்பட, நிறுவனத்தின் சம்பந்தப்பட்ட கோப்பில் பராமரிக்க வேண்டும்.

கடன் விண்ணப்பதாரர், நிபந்தனை மற்றும் விதிமுறைகளை, அவர் ஏற்றுக்கொண்ட ஒரு கடிதம் நிறுவனத்தின் கோப்புகளில் வைக்கப்படும்.

கடன் விண்ணப்பதாரருக்கு கடன் வழங்கும் சமயம், கடன் உடன்படிக்கையுடன் அதற்கு தேவையான இணைப்பு ஆவணங்களும் வழங்கப்படும்.

கடன் உடன்படிக்கையில் கடன் திருப்பி செலுத்துவதில் ஏற்படும் காலதாமதங்களுக்கு வசூலிக்கப்படும் அபராத வட்டி பற்றிய விவரம் பெரிய எழுத்துக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

## கடன் பட்டுவாடா நிபந்தனை மற்றும் விதிமுறைகளில் ஏதேனும் மாற்றம் பற்றிய விவரங்கள்:

கடன் பெற்ற கடன்தாரர் ஒவ்வொருவருக்கும் நிபந்தனை மற்றும் விதிமுறைகளில் ஏதேனும் மாற்றம் இருப்பின் அது பற்றிய விவரங்கள் கடன்தாரர் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய உள்ளூர் மொழியில் அறிவிப்பு செய்யப்படும். இந்த அறிவிப்பில் பணம் வழங்குதலுக்கான பட்டியல், வட்டி விகிதம், சேவை வரி, தவனை முன் செலுத்து கட்டணம் ஆகிய விவரங்கள் அடங்கியிருக்கும்.

கடனை திரும்ப கேட்டல்/ துரிதமாக திருப்பிச் செலுத்துதல் அல்லது உடன்படிக்கையை நிறைவேற்றுதல் போன்றவை கடன் உடன்படிக்கையில் இசைந்துள்ளவாறு இருக்க வேண்டும்.

கடன்தாரர் வாங்கிய கடனை வட்டி உட்பட திருப்பி செலுத்தியவுடன் நிறுவனம் எல்லா கடன் ஆவணங்களையும், பிணைய சொத்தையும் விடுவிக்க வேண்டும். கடன்தாரரிடமிருந்து நிறுவனத்திற்கு ஏதேனும் பாக்கி இருந்தால் பிணைய சொத்தின் மீது உரிமை கோரலாம். அப்படி உரிமை கோரி கணக்கை நேர் செய்யும் பட்சத்தில் நிறுவனம் அவ்வாறு பிணைய சொத்தை சீர்படுத்தும்போது கடன்தாரருக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். கணக்கை நேர் செய்யும் வரையில் பிணைய சொத்தின் மீது நிறுவனத்தின் உரிமை தொடரும்.

## வட்டி பற்றி வெளிப்படைத் தளம்

நிறுவனத்தின் நடைமுறை கொள்கைகளின்படி வட்டி விகிதம், ஒழுங்குமுறை கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் நிர்ணயிக்கப்படும்.

நிறுவனம் வட்டி விகித முறையினை அதனை தீர்மானிக்க தேவைப்படும் காரணிகளான நிதிப்பணத்துக்கான மதிப்பு, லாபம், இழப்புக்கான மதிப்பீடு போன்றவைகளை கணக்கில் கொண்டு கடன் மற்றும் முன்பணம் ஆகியவற்றுக்கான வட்டி விகித முறையினை நிர்ணயிக்கிறது. கடன் வட்டி விகிதத்தில் உள்ள அடுக்குகள் வேறு வேறு துறைகளுக்கு ஏற்ப வேறு வேறு வட்டி விகிதம் அமைப்பது பற்றிய விவரங்கள் கடன்தாரர் அல்லது வாடிக்கையாளருக்கு கடன் விண்ணப்ப படிவத்திலும் மற்றும் அனுமதிக்கடிதத்திலும் தெளிவாக விவரிக்கப்பட்டு இருக்கும்.

வட்டி விகிதம் மற்றும் அபாய நிலை அனுகுமுறை வரிசைகள் பற்றிய விவரங்களும் நிறுவனத்தின் வலைதளத்தில் அவ்வப்போது வெளியிடுதலுடன் தேவையான செய்திதாள்களிலும் வெளியிடப்படும். வலைதளம் மற்றும் செய்திதாள்களில் வட்டிவிகித மாறுதல்களும் அவ்வப்போது புதுப்பிக்கப்படும்.

கடன்தாரர் புரிந்து கொள்ளும் வகையில் வட்டி விகிதம் வருடாந்திர வட்டி விகிதமாக இருக்க வேண்டும்.

## திரும்பபெறும் உரிமை பற்றிய வழிகாட்டுதல்:

நிறுவனத்தின் பிணைய சொத்தை நிறுவனம் திரும்ப பெறும் உரிமை கடன் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். நிறுவனத்தின் இந்த உரிமை சட்டப்பூர்வமான உரிமையாகும். இந்த விதிமுறையின் வெளிப்படைத்தன்மையை நிலைப்படுத்த உடன்படிக்கையில் நிபந்தனை மற்றும் விதிமுறையில் கீழ்கண்ட விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

- சொத்தினை திரும்பபெறும் முன் அறிவிப்பு செய்யப்பட வேண்டிய கால அவகாசம்.

– எந்த எந்த சூழ்நிலையில் இந்த கால அவகாசம் விட்டுக்கொடுக்கப்படலாம்.

– பிணைய சொத்தினை பொறுப்பெடுத்துக்கொள்ளும் நடைமுறை.

– பிணைய சொத்தினை விற்கவோ/ஏலத்துக்கு கொண்டு வரும் முன்னரோ கடன்தாரர்கள் கடன் பணத்தை திரும்ப செலுத்த அறிவிக்கப்பட்டுள்ள கடைசி வாய்ப்பு

– பிணைய சொத்தினை விற்கவோ/ஏலத்துக்கு கொண்டு வரவோ ஏற்படுத்தப்பட்டுள்ள நடைமுறை.

– இந்த விதிமுறைகள் அடங்கிய ஒரு அறிவிப்பு கடன்தாரருக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

## பொது நிபந்தனைகள்:

கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் தவிர மற்ற விஷயங்களில் கடன்தாரரின் நடவடிக்கைகளில் நிறுவனம் ஒதுங்கியே இருக்கும். கடன்தாரர் கடன் கணக்கிலோ இருவரின் ஒப்புதலுடனோ அல்லது வேறு வகையிலோ மாற்றும் விஷயத்தில் உதாரணமாக நிறுவனத்தின் மறுப்பு அறிக்கை கடன்தாரரிடமிருந்து வேண்டுகோள் பெற்ற 21 நாட்களுக்குள் தெரிவிக்கப்படும். இது போன்ற மாற்றம் நிகழ்த்துவதில் ஒப்பந்தப்படியான நிபந்தனைகளும் சட்டத்துக்கு உட்பட்ட வகையிலும் வெளிப்படைத்தன்மை உள்ளதாக இருக்கும்.

கடன் வசூலிக்கும் விஷயத்தில் நிறுவனம் எந்த விதமான தேவையற்ற கெடுபிடிகளான கடன்தாரரை அகால நேரங்களில் திரும்ப திரும்ப அணுகுவது, கடன் வசூலிக்க பலாத்காரத்தை உபயோகிப்பது ஆகிய செயல்களில் ஈடுபடாது. நிறுவனத்தின் அதிகாரிகள் இதுபோன்ற விஷயங்களில் வாடிக்கையாளர்களுடன் கண்ணியமாக நடந்து கொள்வதற்கு ஏற்ற முழு பயிற்சியையும் பெற்றுள்ளது.

## துயர் துடைப்பு நுட்பத்திறன்:

இயக்குனர் குழு, அவ்வப்போது ஏற்படும் பூசல்களை தீர்த்துவைக்க துயர் துடைப்பு குழு ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிர்வாக இயந்திரம் நிறுவனத்தின் அவ்வப்போதைய தீர்மானங்களால் ஏற்படும் பூசல்களை விசாரித்து அவற்றை உடனுக்குடன் தீர்த்துவைக்கிறது. இயக்குனர் குழுவினர் அவ்வப்போது இந்த நியாய நடைமுறை கோட்பாடு செயல்படும் விதத்தையும் துயர்துடைப்பு நிர்வாக இயந்திரம் செயல்படும் விதத்தினையும் பல நிலைகளில் கண்காணித்து உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். இதுபற்றிய ஒருங்கிணைந்த கூட்டறிக்கையை இயக்குனர் குழுவிற்கு அவ்வப்போது அறிவிக்கப்படும்.

## விரிவான பரவச்செய்தலும் காலவாரியான மீள்பார்வையும்:

நிறுவனம், இந்த நியாய நடைமுறை கோட்பாட்டிற்கான நிறுவன வலைதளத்தில் இந்த நிறுவனத்தில் அக்கறை உள்ளவர்களின் நலனுக்காக வெளியிடப்பட்டுள்ளது. மேலும், நிறுவனம் இந்த கோட்பாட்டிற்காக அவ்வப்போது பரீசிலிப்பதிலும் சுத்திகரிப்பதிலும் தேவைப்படும் போது புதுப்பிப்பதிலும் தங்கள் அனுபவங்களையும் புதிய வழிகாட்டுதல்களையும் மற்றும் ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களையும் ஏற்று அவ்வப்போது மேம்படுத்தும்.